www.tamilarangam.net


# கறுப்பு

தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 023

02 யூலை 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com


# ஜி.ரி.விக்கு கே.பி - டக்ளஸ் தரப்பு நிதியுதவி!

தமிழ்த் தேசியத் தொலைக் காட்சி என்று சுயபிரகடனம் செய்துவரும் ஜி.ரி.வி தொலைக்காட்சிக்கு கே.பி – டக்ளஸ் தரப்பு நிதியுதவி வழங்குவதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடமேற்கு இலண்டன் ஹங்கர் லேன் சுற்றுவட்டத்தில் ஜி.ரி.வியின் நிகழ்ச்சி ஒளிபரப்பு நிலையம் இயங்கி வருகின்றது. அதிநவீன ஒளிபரப்பு வசதிகளைக் கொண்ட இந்த நிலையத்திற்கு மாத வாடகையாக 25,000-00 பவுண்களை ஜி.ரி.வி செலுத்தி வருவதாக நிலையத்தின் நிலவுரிமை அமைப்பான வெஸ்ற்கேற் நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேபோன்று செய்கோள் ஒளிபரப்பிற்காக 27,000 யூரோக்களை குளோப் காஸ்ற் என்ற பிரெஞ்சு நிறுவனத்திற்கு மாதாந்தம் ஜி.ரி.வி செலுத்தி வருகின்றது. இதனை விட தமிழகத்தில் இயங்கும் விஜய் தொலைக்காட்சிக்கு மாதாந்தம் 10,500-00 பவுண்களை கட்டணமாக வழங்கி அதன் நிகழ்ச்சிகளை ஜி.ரி.வி ஒளிபரப்பு செய்து வருகின்றது. இதேபோன்று ரொய்டர் செய்திச் சேவைக்கு மாதந்தம் 6,600-00 பவுண்களை மாதந்தம் ஜி.ரி.வி செலுத்துகின்றது. இவற்றைவிட பணியாளர்களுக்கான சம்பளமாக 22,000-00 பவுண்கள் செலவிடப்படுகின்றது.

இதேபோன்று வடக்கு இலண்டன் சவுத் கேற் பகுதியில் ஜி.ரி.வியின் சந்தைப்படுத்தல் பணியகம் இயங்கி வருகின்றது. இதற்கான மாத வாடகையாக 800-00 பவுண்களும், பணியாளர்களுக்கான கொமிசனாக சராசரியாக 3000-00 பவுண்களும், சந்தைப்படுத்தல் பணிப்பாளர் கருணைலிங்கத்தின் சம்பளமாக மாதாந்தம் 1600-00 பவுண்களும் வழங்கப்படுகின்றது.

இதேநேரத்தில் விளம்பரங்கள் - நன்கொடைகள் ஊடாக ஜி.ரி.விக்கு மாதந்தம் 16,000-00 தொடக்கம் 20,000-00 பவுண்கள் வரையான வருமானம் மட்டுமே கிடைப்பதாக நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் கருணைலிங்கத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி ஜி.ரி.வியின் செய்தி ஆசிரியர் ராஜாஜியை அவரது நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, ஸ்ரீபுலம்பெயர்ந்த மக்கள் ஜி.ரி.விக்கு உதவிசெய்ய மறுக்கும் பொழுது, கே.பி – டக்ளஸ் தரப்பிடம் இருந்து நாம் நிதியுதவியைப் பெறுவதில் என்ன தவறு உள்ளது? என்று கேட்டுவிட்டு தொலைபேசியை ராஜாஜி அடித்து வைத்துள்ளார்.





www.tamilarangam.net



# - தாய்நிலம் -

# கே.பியின் 20,000 யூரோ மூக்குப்பொடி!

கே.பி குழுவினரால் வெளியிடப்படும் தாய்நிலம் என்ற பத்திரிகையின் அச்சுச் செலவுக்கு மட்டும் மாதம் 20,000 யூரோக்கள் செலவிடப்படுவதாக கறுப்புக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

கே.பியின் முதன்மை அடியாட்களில் ஒருவராக விளங்கும் மனோ என்றழைக்கப்படும் வேலும்மயிலும் மனோகரனின் மேற்பார்வையில் இந்தப் பத்திரிகை வெளியிடப்படுகின்றது. இதற்கான நிதியை கே.பியின் சொத்துக்களின் காவலனாக விளங்கும் பெருங்குடிமகன் ஊடாகவே கோத்தபாய — கே.பி தரப்பு அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாய்நிலம்

புளொட் கும்பலின் முன்னாள் உயர் அரசியல்பீட உறுப்பினரும், கே.பியின் தற்போதைய மூக்குப்பொடியாகவும் விளங்கும் சிவா சின்னப்பொடி என்பவரே இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக பதவி வகிக்கின்றார். இதில் கே.பி குழுவை சேர்ந்த இளங்கோ என்றழைக்கப்படும் நடராஜா இளங்கோ என்பவர் பாரிஸ் நாதன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதி வருகின்றார். இதேபோன்று சுவிசில் கற்பனையுலகில் வசிக்கும் பம்மாத்து ஊடகவியலாளர் நிராஜ் டேவிட் என்பவர் கஜன் என்ற பெயரில் கட்டுரைகள் எழுதுவதாக கறுப்பின் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன.

கரிச்சட்டிக்கு கீழே வைப்பதற்கும், எண்ணெய் பிடிக்காமல் இருப்பதற்காக வடை போன்ற பலகாரங்களுக்கும் பயன்படுத்தப்படும் இந்தப் பத்திரிகைக்காக, பெரும் தொகையான பணத்தை கே.பி குழுவினர் செலவிடுவது இவர்களிடம் இருப்பில் உள்ள நிதிவளத்தை புலப்படுத்துவதாக பொதுமக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

